**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 162/2013**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 20.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சரவணன் Father's Name : கிருஷ்ணன்

துவக்க நேரம் : 03.34 P.M

**<u>4-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. வாதி மணிமேகலை 1, 2 பிரதிவாதிகளின் மருமகள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு மாணிக்கம், முருகன் ஆகிய 2 ஆண் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி முருகனின் மனைவிதான் வாதி என்றால் சரிதான். 3-ஆம் பிரதிவாதியின் மகன் 4-ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். எங்களது குடும்பமும், பிரதிவாதிகளின் குடும்பமும் பங்காளிகள் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு தென்புறம்தான் எங்களது குடும்ப சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா பெயர் என்னவென்றால் கிருஷ்ணன் ஆகும். எனது பாட்டனார் பெயர் பெருமாள் என்றால் சரிதான். எனது பாட்டானார் பெருமாளும், 1-ஆம் பிரதிவாதி சின்னத்தம்பியும் சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் எங்களது குடும்பத்திற்கும், பிரதிவாதிகளின்குடும்பத்திற்கும் சரிபாதி பாகம் உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி கிணற்றிற்கு வாய்மொழியாக மேற்கு பாகம் எங்களுக்கும், கிழக்கு பாகம்

பிரதிவாதிகளுக்கும் என பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் மேற்கு பகுதியைவிட கிழக்கு பகுதி 20 அடி ஆழம் அதிகமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 20 அடி ஆழத்தை பிரதிவாதிகள்தான் வெட்டினார்கள் என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் பொதுவாக கோடை காலத்தில் மேற்கு பகுதியில் தண்ணீர் இருக்காது என்றால் சரிதான்.

4. மேற்படி கிணற்றில் கிழக்கு பகுதியில் தண்ணீர் எடுக்க எங்களுக்கு தண்ணீர் எடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, ஏற்கனவே நீதிமன்றத்தில் இரு தரப்பிற்கும் சரி சமமாக பாகம் உள்ளது என்று தீர்ப்பாகிவிட்டது. நான் சொல்வது தவறு என்றாலும், அதுபோல் எந்த தீர்ப்பும் இல்லையென்றாலும் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு தாவா கிணற்றிற்குண்டான நிலத்தை தவிர வேறு கிரயம் பெற்ற நிலங்களும் உள்ளது என்றால் சரிதான்.

5. எங்களது குடும்பத்திற்கும், பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் கடந்த 15 ஆண்டுகாலமாக எந்த பேச்சுவார்த்தையும் இல்லையென்றால் சரிதான். தாவா கிணற்றிலிருந்து நாங்கள் கிரயம் பெற்ற நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல முயற்சி செய்தோம் என்றால் சரிதான், ஆனால் கிணற்றிற்கு உண்டான பாகத்தில் சோளம் பயிர் செய்திருந்தோம். அதற்கு தண்ணீர் தேவைப்படாததால் அருகில் உள்ள எங்களுக்கு சொந்தமான நிலத்திற்கு தாவா கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தோம். தாவா கிணற்றிற்கு தொடர்பில்லாத கிணற்றிற்கு தண்ணீர் இறைத்ததை பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்றால் சரிதான், அதன் காரணமாக எங்களுக்குள் சண்டை ஏற்பட்டது என்றால் இல்லை, அதற்காக சண்டை ஏற்படவில்லை.

6. மேற்படி பிரச்சனை தொடர்பாக எங்களுக்குள் சண்டை ஏற்பட்டு கடந்த 20.01.2025 அன்று எங்கள் தரப்பில் ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கும், பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் பாகம் ஏற்பட்டு தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்று கூறியுள்ள நிலையில் மேற்படி பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், ஆனால் எனக்கு படிக்க தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும், எவ்வாறு பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

7. மேற்படி பாகப்பத்திரத்தின் அடிப்படையில் யார் யார் எவ்வளவு பாக நிலத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் இருவரும் சரிசமமாக பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள். இருதரப்பிலும் சரிசமமாக பிரித்துக் கொண்டார்கள் என்றாலும், நான் சொல்வது தவறு என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

8. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் வாதிக்கும், 3-ஆம் பிரதிவாதிக்கும், 1, 2 பிரதிவாதிகள் முன்னின்று பாகம் பிரித்துக் கொடுத்தார்கள் என்று நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி மணிமேகலையின் கணவர் முருகனுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி முருகன் எப்பொழுது இறந்தார் என்றால் சுமார் 25, 26 வருடங்கள் இருக்கும். தாவா சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்பதாலும், மேற்படி இறந்துபோன முருகனின் வாரிசு என்ற அடிப்படையில் 2-ஆம் பிரதிவாதிக்கும் உரிமை உள்ளது என்றால் தாவா சொத்து முழுவதும் முருகன் இறந்த பின்பு வாதி பெயரில் கிரயமாக எழுதிக் கொண்டார்கள், மொத்த சொத்தில் 3-ஆம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு பாதியும், வாதிக்கு பாதியுமாக எழுதிக் கொண்டார்கள். 2-ஆம்

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அவரது பாகத்தையும் சேர்த்து எழுதிக் கொண்டதால் மேற்படி கிரயம் செல்லாது என்றால் சரியல்ல.

10. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் வாதியும், பிரதிவாதிகளும் சமரசம் பேசி அதற்கு பிரதிவாதிகள் கட்டுப்படாததால் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ள நிலையில் எப்பொழுது சமாதானம் பேசினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்குண்டான பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், அது வாதி பெயரில்தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

11. எங்கள் குடும்பத்திற்கும், பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் உள்ள முன் விரோதத்தின் காரணமாக தற்பொழுது வாதிக்கு ஆதராகவாகவும், பிரதிவாதிகளுக்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, இரு குடும்பத்தினரும் எனக்கு வேண்டப்பட்டவர்கள்தான், நடந்த உண்மையை சொல்கிறேன்.

மேற்கண்ட குறுக்கு விசாரணையை 3-ஆம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 04.01 P.M.

Taken down before / by me in open court
and read over / interpreted to the witness
and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.162/2013, Dt.20.01.2026.